[6th August 1966

திரு. வை. சங்கரன் : பொதுவாக அவர்கள் ரிடையர் ஆனவுடன் வீடு வாங்க அல்லது தங்கள் பெண்களுக்குத் திருமணம் செய்ய பிராவிடண்ட் நிதி பணத்தைப் பயன்படுத்த விரும்புவார்களாதலால் அந்தப் பணத்தை ரிடையர் ஆகி ஒருசில மாதங்களுக்குள் கொடுப்பதற்கு வழி வகை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிடையர் ஆன பிறகு மட்டுமல்ல, ரிடையர் ஆவதற்கு முன்னாலேயே வீடு கட்டுவது, திருமணம் செய்வது முதலானவற்றுக்கு பிராவிடண்ட் பண்டிலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : அவர்களுக்கு ஓய்வுப் பணத்தைக் கொடுப்பதற்கு காலதாமதம் இருப்பதோடு கொடுக்கக்கூடிய பணத்திலேயே 100 ரூபாய், 200 ரூபாய் என்று பிடித்துக் கொள்கிறார்கள். அதைப் பற்றிக் கேட்டால் ஆடிட் அப்ஜக்ஷன் வருமா என்று பார்த்துத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இவ்வாறு பணத்தைப் பிடித்துக் கொள்ளாமல் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொடுக்க வேண்டிய பணத்தை அனாவசியமாகப் பிடித்துக் கொள்வதில்லை. தகராறு எதுவும் இல்லையென்றால் முழுப் பணம் கொடுக்கப்படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இங்கு வேலை செய்பவர்கள் வேலையிலிருக்கும்போது இறந்து அவருடைய வாரிசுதார் இறந்த பிறகு கூட பணம் போய்ச் சேருவதில்லை. இதனால் குடும்பமே கெட்டுவிடக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாகக் கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

* 145 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal before the Government to put in its share of contribution for Teachers' Provident Fund proportionately to any extent that a teacher is remitting?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The contribution of teachers to the Provident Fund is limited to six per cent of their pay. Formerly the managements were contributing a sum equal to half the contribution of the subscriber and Government an equal amount. The Government have since decided to nay the managements' share of contribution also to the teachers. The Government contribution and the managements' share will be paid by the Government to the teachers in a lumpsum at the time of their retirement or at the time the T.P.F. accounts are closed. This order came into force from 1st April 1964 in respect of Aided Secondary School teachers and from 1st June 1965 in respect of Aided Elementary School teachers.

6th August 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் தற்போது நிர்ணயித்திருக்கக்கூடிய அளவை விட அதிகமாகக் கொடுப்பதற்குத் தூண்டுதலாக அமையும் வகையில் எவ்வளவுக் கெவ்வளவு அவர்கள் அதிகமாகக் கொடுக்கமுடியுமோ அதைக் கொடுக்கும் வகையில் அந்த விகிதாசாரத்தை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

* 146 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to extend any new concessions to teachers for the withdrawal from their Provident Fund accounts; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : Orders have been issued recently permitting—

(1) the part-final withdrawal for the education of the subscriber's sons or daughters in or outside India subject to certain conditions and for the marriage of subscriber's sons and daughters and, if he has no daughter, of any other female relation dependent on him; and

(2) for the final or part-final withdrawal for house building or for purchasing a house site.

திரு. வை. சங்கரன் : வைத்தியச் செலவுக்கு வேண்டுமென்றால் பிராவிடண்ட் பண்டிலிருந்து கொடுக்க வழி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வைத்தியச் செலவுக்கு மொத்தமாக அவ்வளவு பணம் வேண்டியிருக்காது. அப்படி ஏதாவது வேண்டுமென்றால் அந்த ஆசிரியர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கட்ட நிலம்

* 147 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலம் கூட்டுரோடில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி கட்டுவதற்கு 10 ஏக்கர் நிலம் கோரி, மேற்படி நிலம் வாங்கிக் கொடுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Sri A. V. Naryanswami Naidu of Irumbai came forward to donate ten acres of land for the school.

(*b*) The Director of Secondary Education is examining the offer.